## வகுப்பு - 8 - விலங்கியல்
## 18 - உயிரினங்களின் ஒருங்கமைவு

**பயிற்சி வினாக்கள்:**

1. _______ செல்கள் சிறப்பு வாய்ந்த செல்கள் ஆகும். இவை உடலில் எந்த ஒரு செல்லாகவும் மாற இயலும்.

   (1) நரம்பு (2) மூல (3) இதய (4) எலும்பு

2. உடலில் உள் சூழ்நிலையை சீராக பராமரித்தல் _______ எனப்படும்

   (1) தன்னிலைக் காத்தல் (2) ஹோமியோபைட்ஸ்
   (3) ஹோமியோஹைனசிஸ் (4) ஹோமியோவிலகஸ்

3. காற்றில்லா அல்லது ஆக்சிஜனற்ற சூழலில் குளுக்கோஸ் சிதைவடைந்து _____ க் கொடுக்கிறது.

   (1) சிட்ரிக் அமிலம் (2) அசிட்டிக் அமிலம் (3) லாக்டிக் அமிலம் (4) நைட்ரிக் அமிலம்

4. சவ்வூடு பரவல் கரைசலின் மூலம் இடப்பெயர்ச்சி _______.

   (1) செறிவு மிக்க கரைசலிலிருந்து செறிவு குறைவான கரைசலுக்குச் செல்லும்
   (2) செறிவு குறைவான கரைசலிலிருந்து செறிவுமிக்க கரைசலுக்கு செல்லும்
   (3) இரு நிகழ்வுகளும் நடைபெறும்
   (4) கரைசல்கள் கடத்துவது இல்லை

5. மார்பறையையும், வயிற்றையும் பிரிக்கும் தசை _______.

   (1) உதரவிதானம் (2) எலும்பு தசை (3) இணைப்புத் தசை (4) வரியற்ற தசை

6. கீழ்க்கண்டவற்றில் எது ஒரு செல் உயிரினம் அல்ல?

   (1) அமீபா (2) கொசு (3) பாக்டீரியா (4) யூக்ளினா

7. நுண்ணிய நிலையில் கீழ்மட்ட அலகாகச் செயல்படுவது எது?

   (1) அணு (2) செல் (3) திசு (4) மூலக்கூறுகள்

8. கீழ்க்கண்டவற்றில் எது சைட்டோபிளாசத்தில் காணப்படுவது இல்லை?

   (1) புரதம் (2) உட்கரு (3) அமிலம் (4) கொழுப்பு

9. மிகப் பெரிய ஒரு செல் _______.

   (1) தசை செல் (2) கோழி முட்டை
   (3) நெருப்புக் கோழி முட்டை (4) வாத்து முட்டை

10. இவற்றில் எது ஒரு குறிப்பிட்ட கால இடைவெளியில் தன் வடிவத்தை மாற்றிக் கொள்ளும்?

   (1) எலும்பு தசை (2) இரத்த வெள்ளையணுக்கள்

LIVEWORKSHEETS

(3) இரத்த சிவப்பணுக்கள் (4) நரம்பு செல்

11. தவறானதைக் கண்டறிக:

(1) சுரப்பி எபிதீலியம் ஒரு எளிய திசுவாகும்.

(2) எளிய திசுக்கள் ஒரே வகையான செல்களால் ஆனவை.

(3) திசுக்கள் இரண்டு வகைப்படும்..

(4) வறட்சியான தோலில் உள்ள திசுக்கள் ஒரு எளிய திசுவாகும்.

12. எபிதீலிய திசுவை பற்றித் தவறானதைக் கண்டறிக.

(1) மூளையுடன் நேரடியான இணைப்பை ஏற்படுத்தும்.

(2) நொதிகளை சுரக்கிறது.

(3) ஊட்டச்சத்துக்களை உறிஞ்சுகிறது.

(4) தசைத்திசு அடுக்குகளால் மூடப்பட்டுள்ளது.

13. ஒரு குறிப்பிட்ட பணியை செய்கிற ஒரே மாதிரியான அமைப்பைக் கொண்ட செல்களின் தொகுப்பு _______ ஆகும்

(1) அணுக்கள் (2) தனிமங்கள் (3) திசுக்கள் (4) செல்கள்

14. கண்களைப் பற்றி தவறானது எது?

(1) தசைத் திசு, இணைப்புத் திசு, எலும்புத் திசுக்களால் ஆனது.

(2) பார்ப்பதற்கு உதவுகிறது.

(3) நிறங்களைப் பிரித்தறிய பயன்படுகிறது.

(4) மனித உயிர்க் கடிகாரத்தை பேணுகிறது.

15. கீழ்க்கண்டவற்றில் எது கோழை மற்றும் கண்ணீரை சுரந்து, கண்ணை ஈரமாக்கும்.?

(1) ஐரிஸ் (2) ஸ்கிளிரா (3) கஞ்ஜங்டிவா (4) விட்ரியல் திரவம்

16. டிரக்கியா என அழைக்கப்படுவது _______.

(1) நுரையீரல் (2) திசு (3) மூச்சுக்குழாய் (4) இதயம்

17. உள்சுவாசத்தின் போது உதரவிதானம் _______ நோக்கி இழுக்கிறது.

(1) மேல் (2) கீழ் (3) மாற்றம் இல்லை (4) வலது பக்கம்

18. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு அதிகரிக்கும்போது எதை உற்பத்தி செய்து இரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்துகிறது?

(1) நொதி (2) இன்சுலின் (3) குளுகோகான் (4) அமிலம்

19. _______ முறையின் மூலம் உணவுப்பொருட்கள் செரிமான நொதியுடன் கலக்கின்றன

LIVEWORKSHEETS

(1) செரித்தல் (2) ஒத்த கரைசல் (3) பரவல் (4) ஊடுபரவல்

20. எந்த நிகழ்வின்போது நீரானது செல்லின் உள்ளே செல்கிறது?

(1) குறை செறிவுக் கரைசல் (2) ஒத்த செறிவுக் கரைசல்

(3) மிகை செறிவுக் கரைசல் (4) ஊடுகலப்பு

21. கூற்று (A): மைக்கோ பிளாஸ்மா ஒரு யூகேரியாட்டிக் செல் ஆகும்.

காரணம் (R): மைக்கோபிளாஸ்மா ஒரு தெளிவான உட்கரு இல்லை.

(1) A சரி, R தவறு (2) A தவறு, R சரி (3) A சரி, R சரி (4) A, R தவறு

22. கூற்று (A) :செல் என்பது உயிரினங்களின் அமைப்பு மற்றும் செயல் அலகாகும்.

காரணம் (R): இதை உயிரினங்களின் கட்டுமானம் அலகு எனவும் அழைப்பார்கள்.

(1) கூற்று சரி, காரணம் தவறு (2) கூற்று தவறு, காரணம் சரி

(3) கூற்று சரி, காரணம் சரி (4) இரண்டும் தவறு

23. கூற்று (A): நமது உடலானது கருமுட்டை (சைக்கோட்) என்ற ஒற்றைச் செல்லிருந்து இருந்து உருவாகிறது.

கூற்று (B): இந்நிகழ்விற்கு செல் மாறுபாடடைதல் என்று பெயர்.

(1) கூற்று (A) சரி, கூற்று (B) தவறு (2) கூற்று (A) தவறு, கூற்று (B) சரி

(3) கூற்று (A) மற்றும் கூற்று (B) தவறு (4) கூற்று (A) மற்றும் கூற்று (B) சரி

24. கூற்று (A): முட்டையின் வெள்ளைக் கருவானது வேக வைக்கும்போது திடப்பொருளாக மாற்றம் அடைகிறது.

காரணம் (R): வெள்ளைக்கருவில் ஆல்புமின் என்ற ஒரு சிறப்புப் பொருள் உள்ளது

(1) கூற்று சரி, காரணம் சரி. மேலும் காரணம் கூற்றை விளக்குகிறது.

(2) கூற்று தவறு, காரணம் சரி

(3) கூற்று சரி, காரணம் தவறு.

(4) கூற்று, காரணம் சரி. ஆனால், காரணம் கூற்றை விளக்கவில்லை.

25. கூற்று I: ஐரிஸ் என்பது கண்ணின் நிறமிகளாலான திசு படலமாகும்.

கூற்று II: கண்ணின் உள்ளே நுழையும் ஒளியின் அளவிற்கேற்ப கண் பார்வை அளவைக் கட்டுப்படுத்துகிறது.

(1) கூற்று I தவறு, கூற்று II சரி (2) கூற்று I சரி. கூற்று II சரி

(3) கூற்று I சரி, கூற்று II தவறு (4) கூற்று I, II தவறு

26. பொருத்துக.

(a) பாக்டீரியா. - (i) 90 - 100 செ.மீ

LIVEWORKSHEETS

(b) இரத்த சிவப்பணு - (ii) 100 மைக்ரான்

(c) நரம்பு செல் - (iii) 1 - 2 மைக்ரான்

(d) அண்ட செல். - (iv) 7 மைக்ரான்

(1) a - (i) b - (ii) c - (iii) d - (iv)    (2) a - (iii) b - (iv) c - (ii) d - (i)

(3) a - (iii) b - (iv) c - (i) d - (ii)    (4) a - (iv) b - (ii) c - (i) d - (iii)

27. பொருத்துக.

(a) ஸ்கிளிரா - (i) விழி வெண்படலத்திற்கு ஊட்டமளிக்கிறது.

(b) கஞ்ஜங்டிவா - (ii) ஒளியை கண்ணின் உள்ளே அனுப்புகிறது

(c) கண் பாவை - (iii) வெண்மைப் பகுதி

(d) அக்குவஸ் திரவம். - (iv) விழி வெளிப்படலம்.

(1) a - (iii) b - (iv) c - (ii) d - (i)    (2) a - (ii) b - (iv) c - (iii) d - (i)

(3) a - (iii) b - (iv) c - (i) d - (ii)    (4) a - (iv) b - (ii) c - (i) d - (iii)

28. பொருத்துக.

(a) ஊடுகலப்பு ஒத்தமைவான்கள் - (i) பொருள்களை உடைக்கும்

(b) வளர் மாற்றம் - (ii) நன்னீரில் வாழும் மீன்

(c) ஊடுகலப்பு ஒழுங்கமைவான்கள் - (iii) பொருள்களை உருவாக்கும்

(d) சிதை மாற்றம் - (iv) கடல் வாழ் உயிரினங்கள்

(1) a - (i) b - (iv) c - (ii) d - (iii)    (2) a - (ii) b - (iv) c - (iii) d - (i)

(3) a - (iii) b - (iv) c - (i) d - (ii)    (4) a - (iv) b - (iii) c - (ii) d - (i)

29. பொருத்துக.

(a) கார்போஹைட்ரேட் - (i) $CO_2$, நீர், மற்றும் வெப்பம்.

(b) குளுக்கோஸ் - (ii) நொதிகள், ஹார்மோன்கள், புரதங்கள்

(c) புரதம் - (iii) குளுக்கோஸ்

(d) அமினோ அமிலங்கள் - (iv) அமினோ அமிலம்

(1) a - (iii) b - (iv) c - (ii) d - (i)    (2) a - (ii) b - (iv) c - (iii) d - (i)

(3) a - (iii) b - (i) c - (iv) d - (ii)    (4) a - (iv) b - (ii) c - (i) d - (iii)

30. நுரையீரலை பாதுகாக்கும் சவ்வு எது?

(1) புளூரா    (2) மைக்ரான்    (3) ஐரிஸ்    (4) கார்னியா

31. சுவாசத்தைக் கட்டுப்படுத்துவது ______.

(1) பெருமூளை    (2) முகுளம்    (3) சிறுமூளை    (4) பான்ஸ்

LIVEWORKSHEETS

32. ஆஸ்துமா ஏற்பட காரணமாக அமைவது எது?

(1) புளூரல் குழிக்குள் இரத்தப்போக்கு

(2) மூச்சுக் கிளைக் குழல் மற்றும் நுண் குழலின் வீக்கம்

(3) உதரவிதானச் சேதம்

4) நுரையீரல் தொற்று

33. ஒரு சாதாரண மனிதனின் மூச்சுக்காற்று அளவு?

(1) 800 மி.லி (2) 1200 மி.லி (3) 500 மி.லி (4) 1100-1200 மி.லி

34. உட்சுவாசத்தின் போது உதரவிதானம் ______.

(1) விரிவடைகிறது (2) எந்த மாற்றமும் இல்லை

(3) தளர்ந்து மேற்குவிந்த அமைப்பைப் பெறுகிறது 4) சுருங்கித் தட்டையாகிறது

35. கண்ணில் உள் அடுக்கு என்பது ______.

(1) ரெட்டினா (2) ஸ்கிளிரா (3) கரும்படலம் (4) விழிவெண்படலம்

LIVEWORKSHEETS